மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No. 40/2024

வாக்குமூலம்: வா.சா.1 – நித்யானந்தம்

04.07.2025: சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

சர்வே எண்.151/2 வண்டிப்பாதையை நானும், 1ஆம் பிரதிவாதியும் சேர்ந்து அனுபவித்து வருவது என்றால் சரிதான். இன்னும் பிரிக்கவில்லை. சர்வே எண்.151/2 1ஆம் பிரதிவாதிக்கு 3 செண்ட் எழுதிக் கொடுத்த வண்டிப்பாதையை 18.07.2007 முதல் தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் எங்களுடைய சொந்தக்காரர்கள், உறவினர்கள் தான் சேர்ந்து அனுபவித்து வருகிறார்கள். 3 செண்ட் வண்டிப்பாதையை ஒட்டி மேல்புறம் 1 ஆம் பிரதிவாதி பாத்தியப்பட்ட வா.சா.1ல் கண்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்151/1 லிருந்து 97 சர்வே எண்ணிலிருந்த பூமிக்கு 8 ஏக்கர் பாசன வசதி உள்ளது. சர்வே எண்.151/2 ஒட்டி கீழ்புறம் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் இல்லை. பங்சாயத்து ரோட்டு வழியாக மேற்கே வந்து, சர்வே எண்.151/2 ல் உள்ள வண்டிப்பாதை வழியாக 1 ஆம் பிரதிவாதி தனது நிலத்தை அடைந்து வருகிறார்கள் என்றால் இல்லை.

2) சர்வே எண்.151 நிலத்திற்கு வண்டிப்பாதைக்கு முன்பு சர்வே எண். 153 நிலம் உள்ளது. பஞ்சாயத்து ரோடு வழியாக மேற்கே வந்து, சர்வே எண்.151/2 ல் உள்ள வண்டிப்பாதை வழியாக 1ஆம் பிரதிவாதி தனது நிலத்தை அடைந்து வருகிறார் என்பதை மறுப்பதற்கு நீதிமன்ற ஆணையர் மூலம் நியமனம் செய்து அறிக்கை பெற இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் எனது வழக்கை தோற்று போய்விடும் என்ற பயத்தில் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.151/2 ல் மேல்கோடியில் தென்வடலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒரு Detailed வண்டிப்பாதை 25 அடி அகலத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

3) சர்வே எண்.151/2ல் சம்பந்தப்பட்ட சர்கார் வரைபடத்தில் மேல்கோடியில் தென்வடலாக மேற்படி Detailed வண்டிப்பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை மறுப்பதற்கு கிராம நிர்வாக அலுவலரை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வண்டிப்பாதைக்கு எழுதிக் கொடுத்து அதை அதிகப்படுத்தி சின்னக்கலையம்புத்துார் பஞ்சாயத்திற்கு தான பத்திரம் 1ஆம் பிரதிவாதி பதிந்து கொடுத்ததை ஆட்சேபனை செய்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை சதுர அடி

அதிகப்படுத்தியதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆன தானப்பத்திரம் செல்லாது என்றால் சரிதான். அதிலுள்ள அனைத்து விஸ்தீரணங்களையும் நான் ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிலத்தை பொருத்த மட்டும் நான் ஆட்சேபணை செய்கிறேன்.

4) நான் சர்வே எண்.151/2 ல் எழுதிக் கொடுத்த 3 செண்டில் உள்ள வண்டிப்பாதைக்கு 1308 சதுரடி உள்ளது என்றால் சரிதான். வண்டிப்பாதைக்கு எழுதிக் கொடுத்த 1308 சதுரடியையும் சர்வே எண்.151/2 ல் மேல்கோடியில் தென்வடலாக உள்ள Detailed வண்டிப்பாதையில் உள்ள 700 சதுரடியை சேர்த்து தான் வா.சா.ஆ.2 மூலம் தானம் கொடுக்கப்பட்டது அதன் மூலம் உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு பாதிப்பு உள்ளது. மேற்படி சங்கதிகளை மறுத்து நான் பதிலுறை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மறுக்கிறேன். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள நிலத்தை 1 ஆம் பிரதிவாதி வீட்டடி மனைகளாக பிரித்திருக்கிறார் என்றால் சரிதான்.

5) மேற்படி வீட்டடி மனைகளுக்கு layout Approval 1 ஆம் பிரதிவாதி வாங்கியுள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி மீதியுள்ள நிலத்திற்கு layout Approval வாங்குவதற்கு நான் ஆட்சேபனை மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/-சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.